www.freetnbooks.com

**8 - STD** | **முழு ஆண்டுத் தேர்வு - 2024** | பதிவு எண்.

**அறிவியல்**

நேரம்: 2.30 மணி | மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **10 x 1 = 10**

1. வெப்ப நிலையின் SI அலகு ______
   அ) செல்சியஸ் ஆ) பாரன்ஹீட் இ) கெல்வின் இ) ஆம்பியர்
2. தொடு பரப்பு அதிகமாக இருந்தால் ______ அதிகமாக இருக்கும்.
   அ) அழுத்தம் ஆ) உராய்வு இ) வெப்பநிலை ஈ) விசை
3. பொருந்தாத ஒன்றை கண்டுபிடி
   அ) ஹார்மோனியம் ஆ) புல்லாங்குழல் இ) நாதஸ்வரம் ஈ) வயலின்
4. சிவப்புக்கோள் என்று அழைக்கப்படுவது ______
   அ) புதன் ஆ) வெள்ளி இ) பூமி ஈ) செவ்வாய்
5. நீரில் ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் ஆகியவை ______ நிறைவிகிதத்தில் இணைந்துள்ளன.
   அ) 8:1 ஆ) 1:8 இ) 2:3 ஈ) 3:2
6. வெப்பநிலை மாணிகளில் பயன்படுத்தப்படும் திரவ உலோகம் ______
   அ) தாமிரம் ஆ) பாதரசம் இ) வெள்ளி ஈ) தங்கம்
7. இயற்கைய வாயுவில் பெரும்பான்மையான பகுதிப்பொருள் ______
   அ) மீத்தேன் ஆ) ஈத்தேன் இ) புரோப்பேன் ஈ) பியூட்டேன்
8. உண்ணத்தகுந்த காளான்
   அ) பாலிபோரஸ் ஆ) அகாரிகஸ் இ) பெனிசிலியம் ஈ) அஸ்பர்ஜில்லஸ்
9. வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் ______ ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.
   அ)1971 ஆ) 1986 இ) 1972 ஈ) 1973
10. பின்வருவனவற்றில் எது தொடர்புபடுத்தும் செயலி?
   அ) + ஆ) > இ) - ஈ) Not

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக** **10 x 1 = 10**

11. கண் மருத்துவர் கண்களை பரிசேதிக்கப் பயன்படுத்தப்படும் ஆடி ______
12. ஒரு காந்தம் ______ முனைகளை கொண்டது.
13. நிலவின் மேற்பரப்பில் நடந்த முதல் மனிதர் ______ ஆவார்.
14. ______ ஒரு எதிர் மின்சுமை கொண்ட துகள்
15. நீரின் வேதிப் பெயர் ______
16. காரங்கள் ______ சுவையைக் கொண்டவை.
17. ______ என்பது காற்றில்லா சுவாசத்திற்கு மிகச் சிறந்த உதாரணமாகிறது.
18. தைராய்டு சுரப்பி தொடர்புடைய நோய்களைத் தடுப்பதில் ______ உதவுகிறது.
19. விரும்பாத இடத்தில் வளமை தாவரத்தின் பெயர் ______
20. ______ தேசிய பூங்கா இந்தியாவில் முதல் தேசிய பூங்காவாகும்.

**III. சரியா ? தவறா ? தவறு எனில் திருத்தி எழுதுக..** **5 x 1 = 5**

21. வெப்பக் குடுவையில் சில்வர் சுவர்கள் வெப்பத்தை வெளிப்புறத்தில் எதிரொளிக்கின்றன.
22. சந்திரயான் I சென்னையிலிருந்து ஏவப்பட்டது.
23. ஆந்த்ரசைட் வகை நிலக்கரி மிகவும் உயர்தரமான நிலக்கரியாகும்
24. பெண் அனோபிலஸ் கொசுக்கள் டெங்கு வைரஸ் கிருமிகளைப் பரப்புகின்றன.
25. இதயத் தசை ஒரு இயக்கு தசை.



www.freetnbooks.com | FREETNBOOKS
CamScanner

www.freetnbooks.com

**IV. பொருத்துக.** **6 x 1 = 6**

| | | |
|---|---|---|
| 26. பொருண்மை அழியாவிதி | - | சார் வில்லியம் குருக்ஸ் |
| 27. மாறாவிகித விதி | - | J.J. தாம்சன் |
| 28. கேதோடு கதிர்கள் | - | ஜோசப் ப்ரௌஸ்ட் |
| 29. ஆனோடு கதிர்கள் | - | ஜேம்ஸ் சாட்விக் |
| 30. நியூட்ரான் | - | லவாய்சியர் |
| 31. ப்ளம்புட்டிங் மாதிரி | - | கோல்ட்ஸ்டீன் |

**V. எவையேனும் 15 வினாவிற்கு சுருக்கமான விடையளி** **15 x 2= 30**

32. உராய்வை - வரையறு?
33. ஒளி விலகலுக்கான ஸ்நெல் விதியைக் கூறுக?
34. வெப்பம் கடத்தப்படும் முறைகள் யாவை?
35. ஒலி மாசுபாட்டின் விளைவுகள் யாவை?
36. இயற்கை மற்றும் செயற்கைக் காந்தங்களை வேறுபடுத்துக.
37. நாசாவில் பணியாற்றிய சில இந்தியர்களின் பெயர்களை குறிப்பிடுக.
38. புவித் தொடுப்பு என்றால் என்ன?
39. இரசவாதம் - வரையறு?
40. மாசுபடுதல் என்றால் என்ன?
41. மாறா விகித விதி - வரையறு?
42. நீரின் கடினத் தன்மையை நீக்கும் முறைகள் யாவை?
43. நடுநிலையாக்கல் வினை என்றால் என்ன?
44. தமிழ்நாட்டில் காற்றாலைகளைப் பயன்படுத்தி காற்றாற்றல் உற்பத்தி செய்யப்படும் இடங்களை எழுதுக.
45. வடிவத்தின் அடிப்படையில் நான்கு வகையான பாக்டீரியாக்களின் பெயர்களை எழுதுக.
46. இரு விதையிலைத் தாவரங்களின் இரு பண்புகளை எழுதுக.
47. காற்றுள்ள மற்றும் காற்றில்லா சுவாசத்திற்கு இடையே உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.
48. கிரானியம் என்றால் என்ன?
49. வளரிளம் பருவம் என்றால் என்ன?
50. உயிரி - சுட்டிக் காட்டிகள் என்றால் என்ன?
51. சிவப்பு தரவு புத்தகத்தின் நன்மைகளை எழுதுக.

**VI. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளுக்கு காரணம் கூறுக** **3 x 3 = 9**

52. இடி மின்னலின் போது திறந்த வெளியில் செல்லும் ஒருவர் குடையைப் பயன்படுத்தக்கூடாது.
53. இரவு நேரங்களில் மரங்கள் அடியில் படுத்து உறங்குவது ஆரோக்கியத்திற்குக் கேடு என்ப்படுகிறது.
54. கண்ணை புகைப்படக் கருவியுடன் ஒப்பிடுகிறோம்.

**VII. ஏதேனும் 6 வினாக்களுக்கு விரிவான விடையளி** **6 x 5 = 30**

55. ஒலி வெற்றிடத்தின் வழியாகப் பரவமுடியாது என்பதைக் காட்ட ஒரு சோதனையை விவரி?
56. காந்தத்தின் அன்றாட வாழ்வியல் பயன்களைப் பட்டியலிடுக?
57. சந்திரயான்- I ன் சாதனைகள் யாவை?
58. அமில மழையின் விளைவுகள் யாவை? அதை எவ்வாறு தடுக்கலாம்?
59. பல்வேறு நிலைகளில் நீர் மாசுபடுதலை விளக்குக.
60. சூரிய ஆற்றல் எப்பொழுதும் தீராத ஒரு ஆற்றல் மூலமாகும். இக்கூற்றை நியாயப்படுத்துக.
61. மூட்டுக்களின் வகைகளைக் கூறுக. ஒவ்வொரு வகைக்கும் ஒரு எடுத்துக்காட்டு தருக.
62. நீர் பாசன முறைகளைப் பற்றி விளக்குக.
63. வளரிளம் பருவத்திற்கான ஊட்டச்சத்துத் தேவைகள் பற்றி சுருக்கமாக விளக்குக.



www.freetnbooks.com | FREETNBOOKS
CamScanner